www.agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 06

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: ..........................

## குடியியற் கல்வி

நேரம் : 1.30 மணித்தியாலம்

பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- **1 - 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. உங்களிடம் காணப்படுகின்ற சிறந்த நற்பண்புகளில் ஒன்று அல்லாதது,
    1) சுயநலம் 2) அன்பு காட்டுதல்
    3) நேர்மை 4) உதவி செய்தல்

02. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் யார்?
    1) ஆசிரியர் 2) அபிவிருத்தி சங்க உறுப்பினர்
    3) வலய கல்விப் பணிப்பாளர் 4) அதிபர்

03. இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் யார்?
    1) CWW.கன்னங்கரா 2) SWRD பண்டாரநாயக்க
    3) அகிலவிராஜ் காரியவசம் 4) NM. பெரேரா

04. பாடசாலை ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் தலைவர்
    1) அதிபர் 2) பிரதி அதிபர்
    3) உதவி அதிபர் 4) வலயத் தலைவர்

05. சேனகபிபிலே பிறந்த ஆண்டு
    1) 1925 2) 1920 3) 1980 4) 1921

06. உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் எது?
    1) திருகோணமலை 2) மட்டக்களப்பு
    3) அம்பாரை 4) கிழக்கு மாகாணம்

07. உங்கள் திறைமைகளை இனங்கண்டு அவற்றை சமூகத்திற்கு வெளிக்காட்டும் நபர்,
    1) ஆசிரியர் 2) அதிபர்
    3) பெற்றோர் 4) மதத் தலைவர்

08. “இலவசக் கல்வியின் தந்தை” எனப் போற்றப்படுபவர் யார்?
    1) JR. ஜெயவர்த்தன
    2) பேராசிரியர் சேனக பிபிலே
    3) CWW. கன்னங்கரா
    4) SWRD. பண்டாரநாயக்க



Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk

09. பாடசாலையின் வரலாற்றை அறிய பயன்படும் ஆவணம் அல்லாதது,
1) சம்பவத்திரட்டு புத்தகம் 2) சேர்வு இடாப்பு
3) புள்ளிவிபர அறிக்கை 4) தேர்தல் இடாப்பு

10. உங்களது முழுப்பெயர் சரியானது என்பதை உறுதி செய்யும் பத்திரம் பின்வருவனவற்றுள் எது?
1) தேர்தல் இடாப்பு 2) பிறப்புச் சான்றிதழ்
3) மாணவர் சேர்வு இடாப்பு 4) கிராம அதிகாரி சான்றிதழ்

11. பாடசாலையில் பயன்படுத்தப்படும் ஆவணம் அல்லாதது,
1) சம்பவத்திரட்டு புத்தகம் 2) சேர்வு இடாப்பு
3) புள்ளிவிபர அறிக்கை 4) தேர்தல் இடாப்பு

12. பேராசிரியர் சேனகபிபிலே அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பீடம்,
1) வைத்தியம் 2) பொறியியல்
3) முகாமைத்துவம் 4) விஞ்ஞானம்

13. பாடசாலையில் தேசிய கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பம் அல்லாதது,
1) கலை நிகழ்ச்சிகளின் போது 2) காலை ஆராதனையின் போது
3) பரிசளிப்பு வைபவங்களின் போது 4) பாடசாலை கலையும் போது

14. பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுள் அல்லாதோர்
1) பெற்றோர் 2) ஆசிரியர்கள்
3) பழைய மாணவர்கள் 4) நலன் விரும்பிகள்

15. CWW. கன்னங்கரா அவர்கள் பிறந்த இடம்,
1) காலி 2) அம்பலாங்கொட
3) கண்டி 4) ரன்தொம்ப

(15 புள்ளிகள்)

- **16 - 25 வரையான வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.**

16. பாடசாலைக்கீதம் பாடசாலையின் தனித்துவத்தை வெளிப்படுத்தும். ( )

17. பாடசாலையில் மாணவர்களுக்கு கருத்து வெளியிடும் சுதந்திரம் இல்லை. ( )

18. பாடசாலை ஒழுங்கமைப்பிற்கு உதவும் அமைப்புக்களுள் மாணவத் தலைவர் குழுவும் இடம்பெறுகின்றது. ( )

19. நீங்கள் பாடசாலைக்கு சேர்ந்த திகதியை வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ள முடியும். ( )

20. தன்னுடைய பலவீனங்களை பிறர் சுட்டிக்காட்டும் போது அதனை ஏற்றுக் கொள்ளல் நல்ல பண்பாகும். ( )



Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

Agaram.lk - Keep your dreams alive!

21. திட்டமிட்டு செயலாற்றுவதால் வேலை இலகுவாகும். ( )

22. தனது பலவீனங்களில் ஒன்று பிறரை மதித்தலாகும். ( )

23. திட்டமிடல் வாழ்க்கைக்கு அவசியமன்று. ( )

24. பாடசாலையின் இலட்சியமானது பாடசாலையின் நோக்கக் கூற்றின் ஊடாக வெளிப்படும். ( )

25. பாடசாலைச் சமூகம் என்பது ஒரு பல்லின சமூகமாகும். ( )

(10 புள்ளிகள்)

- **26 - 30 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**
  **(நற்பண்புகளை, கடமைகள், தனித்துவம், ஆசிரியர்கள், பாடசாலை)**

26. மாணவர்கள் தங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள ....................................... நிறைவேற்றுவது அவசியமாகும்.

27. மாணவர்களுக்கு நல்வழி காட்டுதல், அவர்களிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தல் போன்றன ......................................... கடமையாகும்.

28. பாடசாலைச் சட்டத்தினூடாக மாணவர்களிடம் ........................................ வளர்த்துக் கொள்ளலாம்.

29. கல்விசாரா ஊழியர்களும் ........................................ கட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

30. சீருடை மூலம் பாடசாலையின் ........................................ வெளிப்படுத்தப்படுகிறது. (10 புள்ளிகள்)

agaram.lk

- **தொடுக்குக.**

| | |
|---|---|
| 31. திட்டமிடல் | பாடசாலையின் தனித்துவம் |
| 32. கோபமடைதல் | சம்பவத்திரட்டு புத்தகம் |
| 33. பாடசாலைக் கீதம் | நேரம் மீதப்படும் |
| 34. பாடசாலை வரலாறு | பாடசாலைத் தலைவர் |
| 35. அதிபர் | பலவீனம் |

(05 புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

Agaram.lk - Keep your dreams alive!

Agaram.lk - Keep your dreams alive!

பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. 1) உங்களிடம் காணப்படும் நற்பண்புகள் இரண்டு தருக.

2) மனிதனிடம் காணக்கூடிய பலவீனங்கள் இரண்டு தருக.

3) பாடசாலையில் பயன்படுத்தப்படும் எழுத்து மூல ஆவணம் இரண்டு தருக.

(3X4 = 12 புள்ளிகள்)

02. 1) திட்டமிடுவதால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.

2) பிள்ளை நேயப் பாடசாலையின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

3) பாடசாலை ஒழுங்கமைப்பில் காணப்படும் வேறு குழுக்கள் இரண்டு தருக.

(3X4 = 12 புள்ளிகள்)

03. 1) நிறுவனத் தலைவர் என்ற வகையில் அதிபரின் கடமைகள் இரண்டு தருக.

2) ஆசிரியர்களின் கடமைகள் இரண்டு தருக.

3) பாடசாலைக்கு வெளிச் சமூகத்தினால் ஆற்றப்படும் சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(3X4 = 12 புள்ளிகள்)

04. 1) மாணவர்களின் கடமைகள் இரண்டு தருக.

2) பலவீனங்களை குறைத்துக் கொள்ள பின்பற்ற வேண்டிய இரண்டு நடைமுறைகளைத் தருக.

3) தனிமனித திறமைகளை அதிகரித்துக் கொள்வதற்கு பயன்படுத்தக் கூடிய நுட்பங்கள் இரண்டினைத் தருக.

(3X4 = 12 புள்ளிகள்)

agaram.lk

05. 1) பாடசாலைக்கீதம் இசைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

2) பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் இருவரைத் தருக.

3) மாணவர்களால் சக மாணவருக்கு ஆற்ற வேண்டிய பணிகள் இரண்டு தருக.

(3X4 = 12 புள்ளிகள்)



agaram.lk